**செய்தி வெளியீடு எண் : 2360** **நாள் : 28.11.2023**

**<u>வணிகவரித்துறை</u>**

**வாகன தணிக்கையின் மூலம் ரூபாய் 63,52,269/- அரசுக்கு வருவாய் ஈட்டித்தந்த செங்கல்பட்டு கோட்ட நுண்ணறிவு பிரிவு அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டு.**

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி மூர்த்தி, அவர்கள் தலைமையில் இன்று (28.11.2023) சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் அக்டோபர் 2023ஆம் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

27.11.2023 அன்று வாகன தணிக்கையின் போது, உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட தங்க நகைகளை பறிமுதல் செய்து தண்டத்தொகை ரூ.63,52,269/- வசூல் செய்து அரசுக்கு வரிவருவாயை ஈட்டித்தந்த செங்கல்பட்டு கோட்ட நுண்ணறிவுப்பிரிவு சுற்றும்படை அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

மேலும், வணிகவரித்துறை திண்டுக்கல் வரிவிதிப்பு வட்டத்தில் பணிபுரிந்து மறைந்த உதவியாளர் திரு. கா. முத்துசாமி அவர்களின் வாரிசுதாரர் திரு. மு. மனோகர் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசுச்செயலாளர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. வே. இரா. சுப்புலெட்சுமி இ.ஆ.ப., மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in